**சுருக்கம்**

நலத்திட்டம் – விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள குறு/சிறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பயன் பெறும் வகையில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் [ நி.சீ.1(2) ] துறை**

**அரசாணை (நிலை) எண்.265** | **நாள்:10.09.2011**

**ஆவணி, 24**

**திருவள்ளுவர் ஆண்டு 2042**

**படிக்கவும்:**

1. அரசாணை (நிலை) எண்.540, வருவாய்த்துறை, நாள் 19.09.2005.
2. அரசாணை (நிலை) எண்.509, வருவாய்த்துறை, நாள் 07.08.2006.
3. அரசாணை (நிலை) எண்.853, வருவாய்த்துறை, நாள் 29.12.2006.
4. அரசாணை (நிலை) எண். 264 , வருவாய்த்துறை, நாள் 10.09.2011.

-----------

**ஆணை:**

2005ஆம் ஆண்டில் விவசாயத் தொழிலாளர்கள், குறு மற்றும் சிறு விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு, வாழ்க்கையில் இன்னல் மற்றும் எதிர்பாரா இடர்பாடுகளிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு அவர்களுக்கு நிதியுதவி வழங்கும் வகையில் தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற சமூகப் பாதுகாப்புத்திட்டம் 15.08.2005 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2. இத்திட்டத்தின்படி கீழ்க்காணும் உதவித்தொகைகள் வழங்கப்பட்டன:–

அ) உறுப்பினர்களுக்கான உதவிகள்

1) திருமண உதவித்தொகை
2) மகப்பேறு உதவித் தொகை
3) முதியோர் ஓய்வூதியம்
4) விபத்து மரணம் மற்றும் காயம்
5) இயற்கை மரணம் மற்றும்
6) ஈமச்சடங்கு செலவு

ஆ) உறுப்பினரைச் சார்ந்தவர்களுக்கான உதவிகள்

1) கல்வி உதவித்தொகை
2) திருமண உதவித்தொகை

3. அதன் பின்னர் அத்திட்டத்தை மாற்றியமைக்கும் வகையில் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டம் 2006 (தமிழ்நாடு சட்டம் 29/2006) இயற்றப்பட்டது.

371–7

/த.பி.பா./

4. 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்– விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டத்தை நீக்கம் செய்து சட்டமன்றத்தில் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்– விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நீக்கச் சட்டம், 2011 (தமிழ்நாடு சட்டம் 13/2011) நிறைவேற்றப்பட்டது. இதற்கான அரசு அறிவிக்கை 27–8–2011 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

5. நமது மாநிலத்தில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் அவர்களது குடும்பத்தினர், வாழ்க்கையின் அனைத்து முக்கிய நிலைகளிலும் அதாவது a) பிறப்பு b) கல்வி c) திருமணம் d) முதுமை e) விபத்து மற்றும் f) மரணம் முதலியவற்றில் துணை நிற்கும் வகையில் ஒரு விரிவான திட்டத்தை செயல்படுத்துவதன் அவசியம் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு புதிய சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை அரசு செயல்படுத்தப்போவதாக சட்டமன்றத்தில் 10.09.2011 அன்று அறிவித்தார்கள். இந்தத் திட்டம் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் . என்று அழைக்கப்படும் என்றும் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பற்றியும் சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கையில் விவரிக்கப்பட்டன.

6. அதனடிப்படையில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டச் செயலாக்கம் பற்றிய முக்கிய விவரங்கள் பின்வருமாறு:-

அ) <u>திட்டத்திற்கான தகுதி வரையறைகள்</u>

(i) 2.50 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலத்தை அல்லது 5.00 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலத்தை சொந்தமாக வைத்திருந்து மற்றும் அந்த நிலத்தில் நேரடியாக பயிர் செய்யும் 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து குறு / சிறு விவசாயிகள் (நேரடி விவசாயம் செய்பவர்) மற்றும் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலில் ஊதியத்திற்காகவோ அல்லது குத்தகை அடிப்படையிலோ ஈடுபட்டுள்ள 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து குத்தகைதாரர்கள் மற்றும் தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் மூல உறுப்பினர்களாக பதிவு பெற தகுதி உள்ளவர்களாவர். மேலும், அவர்களைச் சார்ந்து வாழும் குடும்ப உறுப்பினர்களும் இத்திட்டத்தின் கீழ் உறுப்பினராகப் பதிவு செய்ய தகுதியானவர்கள்.

(ii) இத்திட்டத்திற்கென கீழ்க்கண்ட பணிகள் விவசாயம் சார்ந்த தொழில்கள் என்று கருதப்படும்.

- (a) தோட்டக்கலை
- (b) பட்டுப்புழு வளர்ப்பு
- (c) பயிர் வளர்த்தல், புல் வளர்த்தல் அல்லது தோட்ட விளைபொருள்
- (d) ஒரு குடியானவர் தமது நிலத்தில் முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ மேய்ச்சலுக்காக பயன்படுத்துதல்.
- (e) உர வகையிலான பயிர்களை வளர்க்கும் நோக்கத்திற்காக நிலத்தை பயன்படுத்துதல்
- (f) பால் பண்ணைத் தொழில்
- (g) கோழிப்பண்ணை

(h) கால்நடை வளர்ப்பு
(i) மரங்களை வளர்த்தல்
(j) உள்ளூர் மீன்பிடி தொழிலில் ஈடுபடுதல்

(iii) இத்திட்டம் தொடர்பாக 'சார்ந்து வாழ்பவர்' என்பது மேற்குறிப்பிட்ட பதிவு பெற்ற மூல உறுப்பினரின் பொருள் ஈட்டாத கீழ்க்கண்ட உறவினர்கள் என்று பொருள்படும்.

i) மனைவி அல்லது கணவன் (நேர்விற்கேற்ப)
ii) குழந்தைகள்
iii) இறந்துவிட்ட மகனுடைய மனைவி (விதவை மருமகள்) மற்றும் குழந்தைகள் மற்றும்
iv) பெற்றோர்

(iv) இந்த திட்டத்தின் கீழ் உறுப்பினராகப் பதிவு செய்வதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

ஆ) கணக்கெடுத்தல்

(i) இந்த திட்டத்தின் கீழ் உறுப்பினர்களை பதிவு செய்ய கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் ஒவ்வொரு கிராமத்திலும் குடும்ப அட்டையின் (Ration card) அடிப்படையில் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும். இந்த பணிக்காக ஒரு தனி பதிவேடு கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மாவட்ட நிர்வாகத்தால் அச்சடித்து வழங்கப்படும். இந்த பதிவேட்டில், கிராம நிர்வாக அலுவலர் குடும்ப அட்டை வைத்துள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் (இத்திட்டத்தின் விதிமுறைகள்படி) தகுதியுள்ள நபர்களை குடும்ப அட்டையின் எண்ணுடன் பதிவு செய்வார். இந்தப்பதிவேட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு தனி பக்கம் ஒதுக்கப்பட வேண்டும். மூல உறுப்பினராகப் பதிவு செய்வது தொடர்பான தகுதி குறித்தும் மற்றும் அவரை சார்ந்து வாழ்வோரை அதில் சேர்ப்பதற்கான தகுதி குறித்தும் கிராம நிர்வாக அலுவலர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(ii) 2.50 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலத்தை அல்லது 5.00 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலத்தை சொந்தமாக வைத்திருந்து மற்றும் அந்த நிலத்தில் நேரடியாக பயிர் செய்யும் 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து சிறு/குறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலில் கூலி அல்லது குத்தகை அடிப்படையில் ஈடுபட்டுள்ள 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து குத்தகைதாரர்கள் மற்றும் தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் மூல உறுப்பினர்களாக பதிவு பெற தகுதி உள்ளவர்களாவர். அவர்களது கணவன் / மனைவி வயதைக் குறிப்பிட்டு, நேரடியாக விவசாயம் செய்யும் சிறு/குறு விவசாயி அல்லது விவசாயம் / விவசாயம் சார்ந்த தொழில்களில் குத்தகைதாரராக அல்லது

தொழிலாளராக உள்ளாரா என்பது குறிப்பிடுவது அவசியம். மூல உறுப்பினரைச் சார்ந்து வாழும் (அதாவது பொருள் ஈட்டாத) இதர குடும்ப உறுப்பினர்கள் இந்தத் திட்டத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்யப்படுவர்.

(iii) கணக்கெடுப்பு முடித்தவுடன் கிராம நிர்வாக அலுவலர் வட்டாட்சியருக்கு பதிவேட்டினை சமர்ப்பித்தல் வேண்டும். வட்டாட்சியர் அதிலுள்ள பதிவுகளை சரிபார்க்க வருவாய் ஆய்வாளர் மற்றும் துணை வட்டாட்சியர் மூலம் நடவடிக்கை மேற்கொள்வார். விடுபட்ட மற்றும் தவறாக சேர்க்கப்பட்ட இனங்களை சேர்க்கவோ அல்லது நீக்கம் செய்யவோ இச்சமயத்தில் முடியும். ஒவ்வொரு கிராமத்திலும் முடிவு செய்யப்பட்ட புள்ளி விவரங்கள் வட்ட அளவிலும் மாவட்ட அளவிலும் தொகுக்கப்பட்டு, அதன் பின்னர் அடையாள அட்டை அச்சிடும் பணிக்காக எல்காட் நிறுவனத்திற்கு மின் அஞ்சல் மூலம் அனுப்பப்படும்.

இ) <u>திட்ட அடையாள அட்டைகள்</u>

ஒரு குடும்பத்தில், விவசாயத் தொழிலில் ஈடுபடும் கணவன் மற்றும் மனைவி இருவருக்கும் பண்பேறிய சிவப்பு வண்ணத்திலும், அதாவது Maroon வண்ணத்திலும், அவர்களைச் சார்ந்து வாழும் பிற குடும்ப உறுப்பினர்களுக்கு சாம்பல் நிறத்திலும் அடையாள அட்டைகள் வழங்கப்படும். கணவன் அல்லது மனைவி விவசாயத் தொழிலில் ஈடுபடாத பட்சத்தில் அவருக்கும் சாம்பல் நிற அட்டை வழங்கப்படும்.

திட்ட அடையாள அட்டைகளை அச்சிடும் பணி எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும்.

குடும்பத்தில் பதிவு செய்யப்படும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு தனி எண்ணுடன் அட்டை வழங்கப்படும். மூல உறுப்பினரின் அட்டை எண் இதர உறுப்பினர்களின் அட்டைகளிலும் இடம்பெறும். குடும்ப அட்டையின் (Ration Card) எண் அனைத்து உறுப்பினர்களின் அட்டைகளிலும் இடம்பெறும். வரும் காலத்தில் ஒவ்வொரு தனி நபருக்கும் பிரத்யேக அடையாள எண் (UID) வழங்கப்படும்பொழுது அதனுடன் இத்திட்டத்தை இணைத்து பிற அரசு உதவிகளை எளிதில் பெற இது உதவியாக இருக்கும்.

நில உடமைகளை பதிவு செய்ய ஒரு தனிப்பக்கம் மூல உறுப்பினரின் அடையாள அட்டையில் இடம் பெறும். இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் பல்வேறு வகையான உதவிகளை பதிவு செய்வதற்கு ஏற்ற வகையிலும் வெற்றுத் தாள்கள் ஒவ்வொரு அட்டையிலும் இருக்கும்.

ஈ) <u>திட்டப்பணி மேற்கொள்ளும் பணியாளர் அமைப்பு :</u>

(i) இத்திட்டம் நிலச்சீர்திருத்த துறை மூலம் செயல்படுத்தப்படும். நிலச்சீர்திருத்த இயக்குநர் மாநில அளவில் ஒருங்கிணைப்பு அலுவலராக (Nodal Officer) இருப்பார். மாவட்ட ஆட்சியர்கள், துணை ஆட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மற்றும் வருவாய் கோட்டாட்சியரின் மேற்பார்வையில் தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மூலமாக வருவாய்த்துறை அதிகாரிகளைக் கொண்டு செயல்படுத்தப்படும்.

(ii) இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக எவ்வித கூடுதல் பணியிடங்களும் உருவாக்கப்படக் கூடாது.

7. உயர்நிலைக் குழு

இத்திட்டத்தினை மேற்பார்வையிட அரசளவில் உயர்நிலைக்குழு ஏற்படுத்தப்படும். இதற்கான ஆணைகள் தனியாக வெளியிடப்படும்.

8. திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவிகள்

அ. கல்விக்கான உதவி

(i) இத்திட்டத்தின்கீழ் பதிவுபெற்ற உறுப்பினர் ஒருவரின் குழந்தைகளின் கல்விக்காக வழங்கப்படும் உதவித் தொகை விவரங்கள் பின்வருமாறு:—

| வ. எண். | கல்வி விவரம் | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்குவோர் | |
|---|---|---|---|---|---|
| | | ஆண் ரூ. | பெண் ரூ. | ஆண் ரூ. | பெண் ரூ. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | தொழிற்பயிற்சி நிறுவனம் (ITI) மற்றும் பல்தொழில்நுட்ப பயிற்சி ( Polytechnic) | 1250 | 1750 | 1450 | 1950 |
| 2. | கவின்கலை, ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டயப்படிப்பு (Diploma in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு) | 1250 | 1750 | 1450 | 1950 |
| 3. | இளங்கலை பட்டப்படிப்பு (Bachelor Degree) மற்றும் கவின் கலையில் இளங்கலைப் பட்டம், ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டப்படிப்பு (Bachelor Degree in Fine Arts, Teacher Education and Nursing) (ஆண்டொன்றுக்கு) | 1750 | 2250 | 2000 | 2500 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | முதுகலை பட்டப்படிப்பு ( Post Graduate) மற்றும் கவின் கலை மற்றும் செவிலியர் முதுகலை பட்டப்படிப்பு (Post Graduate Degree in Fine Arts and Nursing) (ஆண்டொன்றுக்கு) | 2250 | 2750 | 3250 | 3750 |
| 5. | சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல் வேளாண்மை அல்லது அது தொடர்பான பாடங்களில் தொழிற்கல்வி (Professional Courses) (ஆண்டொன்றுக்கு) | 2250 | 2750 | 4250 | 4750 |
| 6. | முதுநிலை தொழிற்கல்வி (Post Graduate Professional Courses) (ஆண்டொன்றுக்கு) | 4250 | 4750 | 6250 | 6750 |

(ii) வேறு எந்தத் துறையிலாவது கல்விக்காக நிதி உதவி பெற்றாலும் இத்திட்டத்தின் கீழ் மேற்கூறப்பட்ட இனங்களுக்கு கல்வி உதவியானது கூடுதலாக அமையும். 10ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர் பள்ளிக்கல்வித்துறை மூலம் செயல்படுத்தப்படவுள்ள திட்டத்தின் கீழ் பயன் பெறுவர்.

(iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாடப்பிரிவுகளுள், புதிதாக சேர்க்கப்பட்டுள்ள கவின்கலை, ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பிரிவுகளில் பட்டயம், பட்டம், முதுகலைப்பட்டம் தவிர ஏனைய பாடப்பிரிவுகளின் கல்வி உதவித்தொகை குறித்த செலவினத்திற்கு, 2011–12–ஆம் ஆண்டில் திருத்திய வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் பல்வேறு மானிய கோரிக்கைகளில் ரூ.16.34 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் 2006 நீக்கம் செய்யப்பட்டு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டம் செயல்படுத்தவிருப்பதை தொடர்ந்து, தற்போது உள்ள நிதி பயன்படுத்திட ஏதுவாக கீழே பத்தி (iv)–இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணக்குத் தலைப்புகளின் பெயர் மாற்றம் செய்யப்படுகிறது.

(iv) மேற்கண்ட கல்வி உதவிக்கான செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:-

(a) <u>தொழிற்பயிற்சி நிறுவனம்/கவின் கலை, ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டயப்படிப்புகளுக்கான கல்வி உதவி</u>

பொதுப் பிரிவு

2202 தொழில் நுட்பக் கல்வி – 80 பொது – 107 படிப்புதவித் தொகைகள் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் JE முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – கல்வி உதவி – 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை (து.தொ.கு 2202 80 107 JE 1299)

(கோரிக்கை எண் 32 தொழிலாளர் நலம் மற்றும் வேலைவாய்ப்புத்துறை)

ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம்

2202 தொழில் நுட்பக் கல்வி – 80 பொது – 789 ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் JA முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – கல்வி உதவி –12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை (து.தொ.கு 2202 80 789 JA 1293)

(கோரிக்கை எண் 32 தொழிலாளர் நலம் மற்றும் வேலைவாய்ப்புத்துறை)

(b) பல்தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் பொறியியல், பொறியியல் தொழில்கல்வி, முதுநிலை பொறியியல் தொழில் கல்வி படிப்புகளுக்கான கல்வி உதவி

பொதுப் பிரிவு

2203 – 00 தொழில் நுட்பக் கல்வி – 107 படிப்புதவித் தொகைகள் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் JB முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – கல்வி உதவி – 12 படிப்புதவித்தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை (து.தொ.கு 2203 00 107 JB 1290)

(கோரிக்கை எண் 20 உயர்கல்வித்துறை)

ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம்

2203 – 00 தொழில் நுட்பக் கல்வி – 789 ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JA முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – கல்வி உதவி –

12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை (கு.தொ.கு 2203 00 789 JA 1298)

(கோரிக்கை எண் 20 உயர்கல்வித்துறை)

(c) இளங்கலை பட்டப் படிப்பு, முதுகலை பட்டபடிப்பு மற்றும் கவின்கலை மற்றும் செவிலியர் இளங்கலை / முதுகலை படிப்புகளுக்கு கல்வி உதவித்தொகை

பொதுப்பிரிவு

2202 பொதுக்கல்வி – 03 பல்கலைக் கல்வியும் உயர் கல்வியும் – 107 படிப்புதவிக் தொகைகள்– பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE முதலமைச்சரின் உழவர்பாதுகாப்புத் திட்டம் – கல்வி உதவி – 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை
(கு.தொ.கு 2202 03 107 JE 1292)

(கோரிக்கை எண் 20 உயர்கல்வித்துறை)

ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம்

2202 பொதுக்கல்வி – 03 பல்கலைக் கல்வியும் உயர் கல்வியும் – 789 – ஆதிதிராவிடருக்கான சிறப்பு கூறுகள் திட்டம் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JA முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – கல்வி உதவி – 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை (கு.தொ.கு 2202 03 789 JA 1296)

(கோரிக்கை எண் 20 உயர்கல்வித்துறை)

(d) சட்டப்படிப்புக்கான கல்வி உதவித் தொகை

பொதுப்பிரிவு

2202 பொதுக்கல்வி – 03 பல்கலைக் கல்வியும் உயர் கல்வியும் – 107 படிப்புதவித் தொகைகள்– பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – JF முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – கல்வி உதவி – 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை (கு.தொ.கு 2202 03 107 JF 1290)

(கோரிக்கை எண் 33 சட்டத்துறை)

ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம்

2202 பொதுக்கல்வி – 03 பல்கலைக் கல்வியும் உயர் கல்வியும் – 789 – ஆதிதிராவிடருக்கான சிறப்பு கூறுகள் திட்டம் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – JB முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – கல்வி உதவி – 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை (த.தொ.கு 2202 03 789 JB 1294)

(கோரிக்கை எண் 33 சட்டத்துறை)

(e) மருத்துவ தொழிற்கல்வி மற்றும் முதுநிலை தொழிற்கல்விக்கான கல்வி உதவித்தொகை

பொதுப்பிரிவு

2202 பொதுக்கல்வி – 80 பொது – 107 படிப்புதவித் தொகைகள் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – JH_முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – கல்வி உதவி – 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 02 மெட்ரிக் படிப்புக்கு மேல்படிப்பு (த.தொ.கு 2202 80 107 JH 1220)

(கோரிக்கை எண் 19 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை)

ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம்

2202 பொதுக்கல்வி – 80 பொது – 789 –ஆதிதிராவிடருக்கான சிறப்பு கூறுகள் திட்டம் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – JB_முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – கல்வி உதவி – 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 02 மெட்ரிக் படிப்புக்கு மேல்படிப்பு (த.தொ.கு 2202 03 789 JD 1224)

(கோரிக்கை எண் 19 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை)

(f) கால்நடை அறிவியல் தொழில்கல்வி மற்றும் முதுநிலை தொழில்கல்வி படிப்புக்கான கல்வி உதவித்தொகை

<u>பொதுப்பிரிவு</u>

2202 பொதுக்கல்வி – 80 பொது – 107 படிப்புதவித் தொகைகள்– பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – JF – முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – கல்வி உதவி – 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை (து.தொ.கு 2202 80 107 JF 1297)

(கோரிக்கை எண் 6 கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை)

<u>ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம்</u>

2202 பொதுக்கல்வி – 80 பொது– 789 –ஆதிதிராவிடருக்கான சிறப்பு கூறுகள் திட்டம் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – JI – முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – கல்வி உதவி – 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை (து.தொ.கு 2202 80 789 JI 1291)

(கோரிக்கை எண் 6 கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை)

(g) <u>வேளாண்மை தொழில்கல்வி மற்றும் முதுநிலை தொழில்கல்வி படிப்புக்கான கல்வி உதவித்தொகை</u>

<u>பொதுப்பிரிவு</u>

2202 பொதுக்கல்வி – 80 பொது – 107 படிப்புதவித் தொகைகள்– பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – JG – முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – கல்வி உதவி – 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை (து.தொ.கு 2202 80 107 JG 1295)

(கோரிக்கை எண் 5 வேளாண்மைத்துறை)

<u>ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம்</u>

2202 பொதுக்கல்வி – 80 பொது – 789 –ஆதிதிராவிடருக்கான சிறப்பு கூறுகள் திட்டம் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – JC – முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – கல்வி உதவி – 12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை (து.தொ.கு 2202 80 789 JC 1299)

(கோரிக்கை எண் 5 வேளாண்மைத்துறை)

(v) மேலே குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத் தலைப்புகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியினை பல்வேறு துறைத்தலைவர்கள் பெற்று வழங்கிட வகை செய்யப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு நிலச் சீர்திருத்தத்துறையால் செயல்படுத்தப்படவிருப்பதால், இச்செலவினத்தை நிலச்சீர்திருத்தத்துறை மேற்கொள்ள ஏதுவாக, மேற்சொன்ன கணக்குத் தலைப்புகளுக்கு நிலச்சீர்திருத்த ஆணையர் மதிப்பீட்டு, கட்டுப்பாட்டு மற்றும் சரிபார்த்தல் அலுவலராகச் செயல்படுவார்.

ஆ) <u>திருமண உதவி</u>

(i) சமூக நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திருமண உதவித் திட்டத்திற்கு தகுதியான பதிவு பெற்ற உறுப்பினர்கள் அல்லது அவர்களைச் சார்ந்தவர்கள் அத்திட்டத்தின்கீழ் மட்டுமே உதவித் தொகை பெறுவர். அத்திட்டங்களில் உதவித் தொகை பெற தகுதியற்றவர்கள் இந்த திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெற தகுதியுடையவராவர். இத்திட்டத்தின் கீழ் முறையே ஆணுக்கு ரூ.8,000/– எனவும், பெண்ணுக்கு ரூ.10,000/– எனவும் திருமண உதவித்தொகை வழங்கப்படும். இதற்கென கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவு செய்திருக்க வேண்டும்.

1) இத்திட்டத்தின் கீழ் உறுப்பினராக பதிவாகியிருக்க வேண்டும்.

2) திருமணத்திற்கான சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட வயதை நிறைவு செய்திருக்க வேண்டும்.

3) ஒரு உறுப்பினருக்கு ஒரு திருமணத்திற்கு மட்டுமே திருமண உதவித்தொகை அனுமதிக்கப்படும்.

(ii) விவசாயிகள் / விவசாயத் தொழிலாளர்களின் குடும்பத்தினர், சமூக நலத்துறையின் கீழ் வழங்கப்படும் திருமண உதவித்திட்டத்தின் கீழான உதவியினை எளிதாக பெறும் வகையில் தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) தேவையான சான்றிதழ்களை விரைந்து பெற்றுத்தர வசதி செய்து தரவேண்டும்.

(iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள உதவித் தொகையினை வழங்கிட ஏதுவாக வருவாய்த்துறை மானிய கோரிக்கையில் 2011–12–ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.17.80 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் 2006 நீக்கம் செய்யப்பட்டு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தவிருப்பதைத் தொடர்ந்து தற்போது உள்ள

நிதியொதுக்கத்தை பயன்படுத்திட ஏதுவாக கீழே பத்தி (iv)–இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணக்குத் தலைப்புகளின் பெயர் மாற்றம் செய்யப்படுகிறது.

(iv) திருமண உதவி குறித்த செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்:-

<u>பொது பிரிவு</u>

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் – 200 ஏனைய திட்டப் பணிகள் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KI முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – உறுப்பினர்களின் திருமணச் செலவிற்கு உதவி – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (த.தொ.கு 2235 60 200 KI 0930)

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் – 200 ஏனையப் திட்டப் பணிகள் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KK முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – உறுப்பினர்களைச் சார்ந்தவர்களின் திருமணச் செலவிற்கு உதவி – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (த.தொ.கு 2235 60 200 KK 0936)

<u>ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம்</u>

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் – 789 ஆதிதிராவிடருக்கான சிறப்பு கூறுகள் திட்டம் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JM முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – உறுப்பினர்களின் திருமணச் செலவிற்கு உதவி – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (த.தொ.கு 2235 60 789 JM 0937)

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் – 789 ஆதிதிராவிடருக்கான சிறப்பு கூறுகள் திட்டம் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம் – JN முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – உறுப்பினர்களைச் சார்ந்தவர்களின் திருமணச் செலவிற்கு உதவி – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (த.தொ.கு 2235 60 789 JN 0935)

<u>பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம்</u>

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் – 796 பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம் பதினோராவது ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JF முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – உறுப்பினர்களின் திருமணச் செலவிற்கு உதவி – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (து.தொ.கு 2235 60 796 JF 0936)

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் – 796 பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம் பதினோராவதுஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JG முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – உறுப்பினர்களைச் சார்ந்தவர்களின் திருமணச் செலவிற்கு உதவி – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (து.தொ.கு 2235 60 796 JG 0934)

இ) <u>மகப்பேறு உதவித் தொகை</u>

இந்த உதவித் தொகை பதிவு பெற்ற உறுப்பினருக்கு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையால் மகப்பேறு உதவிக்கென அந்த துறையால் செயல்படுத்தப்படும் திட்டத்தின் மூலம் வழங்கப்படும். திட்ட உறுப்பினர்கள் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் மகப்பேறு உதவித் தொகையினை எளிதாக பெறும் வகையில் தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) தேவையான சான்றிதழ்களை பெற்றுத்தர வசதி செய்து தர வேண்டும்.

ஈ) <u>முதியோருக்கான ஓய்வூதியம்</u>

i) இத்திட்டத்தின் கீழ் பண்பேறிய சிவப்பு (மரூன்) நிற அட்டை பெற தகுதியுடைய ஆதரவற்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1,000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) வழங்கப்படும்.

ஆதரவற்றவர் என்பது கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்படுகிறது.

1) 60 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.
2) முதுமை காரணமாக உடல் உழைப்பு திறன் இல்லாதவராக இருத்தல் வேண்டும் மற்றும்

3) வேறு எந்த ஆதரவுமில்லாமல், அதாவது மகன் / மகள் இருந்தாலும் அவர்களால் ஆதரவு இல்லாமல் புறக்கணிக்கப்பட்டவராக இருக்க வேண்டும்.

ii) ஆதரவற்ற வேளாண் தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் என்ற மற்றொரு திட்டம் 1981 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில், சுமார் 3.55 இலட்சம் பயனாளிகள் உள்ளனர். ஒரே நோக்கத்துடன் இரண்டுவித திட்டங்கள் இருப்பதற்குப் பதிலாக விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கான அனைத்து முதியோர் ஓய்வூதியத் திட்ட பயனாளிகளையும் ஒருமுகப்படுத்தி செயல்படுத்த ஏதுவாக, வேளாண் தொழிலாளர் ஓய்வூதியத் திட்டப்பயனாளிகளும் இத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவர்.

iii) இவ்வாறு இந்நிதியாண்டில் புதிய திட்டத்தின் கீழ் 5 இலட்சம் பேர் முதியோர் ஓய்வூதியத்தொகை பெறுவர்.

(iv) வருவாய் நிருவாகத்துறையால் செயல்படுத்தப்படும் "ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்களுக்கான உதவித்தொகை" திட்டச் செலவுக்காக ரூ.387.99 கோடியும், நிலச்சீர்திருத்த துறையால் செயல்படுத்தப்படும் "வேளாண் தொழிலாளர் முதியோர் உதவித்தொகை" திட்டச் செலவிற்கான ரூ.62.88 கோடியும், வருவாய்த்துறை மானிய கோரிக்கையில் 2011–12–ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது இவ்விரு திட்டங்களும் ஒருமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தவிருப்பதை தொடர்ந்து செலவினத்தை நிலச்சீர்திருத்த துறை மட்டுமே மேற்கொள்ள ஏதுவாக கீழே பத்தி (V) –இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணக்குத்தலைப்புகளின் பெயர் மாற்றம் செய்யப்படுகிறது.

(V) முதியோர் ஓய்வூதியம் குறித்த செலவினம் கீழ்கண்ட புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>பொது பிரிவு</u>

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் – 200 ஏனையப் திட்டப் பணிகள் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JC முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – முதியோர் ஓய்வூதியம் – 27 ஓய்வூதியங்கள் – 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (கு.தொ.கு 2235 60 200 JC 2751)

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் – 200 ஏனையப் திட்டப் பணிகள் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KL முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – முதியோர் ஓய்வூதியம் – 05 அலுவலகச் செலவுகள் – 04 அலுவலகப்பணி அஞ்சல்வில்லைகள் மற்றும் தபால் செலவு (த.தொ.கு. 2235 60 200 KL 0541) – 27 ஓய்வூதியங்கள்– 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (த.தொ.கு 2235 60 200 KL 2754)

<u>ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம்</u>

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் – 789 ஆதிதிராவிடருக்கான சிறப்பு கூறுகள் திட்டம் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JG முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – முதியோர் ஓய்வூதியம் – 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (த.தொ.கு 2235 60 789 JG 2759)

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் – 789 ஆதிதிராவிடருக்கான சிறப்பு கூறுகள் திட்டம் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JO முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – முதியோர் ஓய்வூதியம் – 05 அலுவலகச் செலவுகள் – 04 அலுவலகப்பணி அஞ்சல் வில்லைகள் மற்றும் தபால் செலவு (த.தொ.கு.2235 60 789 JO 0540) – 27 ஓய்வூதியங்கள் – 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (த.தொ.கு 2235 60 789 JO 2753)

<u>பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம்</u>

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் – 796 பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JN முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டம் – முதியோர் ஓய்வூதியம் – 27 ஓய்வூதியங்கள் – 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் (த.தொ.கு 2235 60 796 JN 2750)

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் – 796 பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JH முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – முதியோர் ஓய்வூதியம்– 27 ஓய்வூதியங்கள் – 05 சமூகப் பாதுகாப்பு (த.தொ.கு 2235 60 796 JH 2752)

(vi) மேலே குறிப்பிடப்பட்டுள்ள '2235 60 102 JC , 2235 60 789 JG மற்றும் 2235 60 796 JN' ஆகிய கணக்குத் தலைப்புகளுக்கு மதிப்பீட்டு, கட்டுப்பாட்டு மற்றும் சரிபார்த்தல் அலுவலராக நிலச்சீர்திருத்த ஆணையர் செயல்படுவார்.

(உ) விபத்து நிவாரணம்

மரூன் நிற அட்டை பெறத் தகுதியுள்ள உறுப்பினர் ஒருவர் விபத்துக்குள்ளாக நேரிடும்பொழுது கீழ்க்குறிப்பிட்டவாறு உதவித் தொகை வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| (a) | இறப்பு | ரூ. 1,00,000/– |
| (b) | முடியாத அளவிற்கு இழப்பு<br>(i) இரண்டு கைகள் அல்லது<br>(ii) இரண்டு கால்கள் அல்லது<br>(iii) ஒரு கை மற்றும் ஒரு கால் அல்லது<br>(iv) மீட்க முடியாத அளவிற்கு கண்கள் இரண்டிலும் பார்வை இழத்தல் | ரூ.1,00,000/– |
| (c) | முடியாத அளவிற்கு இழப்பு<br>(i) ஒரு கை அல்லது<br>(ii) ஒரு கால் அல்லது<br>(iii) பக்கவாதம் | ரூ.50,000/– |
| (d) | மேலே (b) மற்றும் (c) இனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்புகள் அல்லாமல் கடுமையான காயங்களின் காரணமாக கை கால்களை இழத்தல் | ரூ.20,000/– |

(ஊ) இயற்கை மரண உதவி

மரூன் நிற அட்டை பெறத் தகுதியுள்ள உறுப்பினர் ஒருவர் இயற்கையாக மரணமடைந்தால் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) அவரது குடும்பத்திற்கு வழங்கப்படும்.

(எ) ஈமச்சடங்கு செலவுக்கான உதவி

எந்த ஒரு பதிவு பெற்ற உறுப்பினர் இறந்தாலும் ஈமச்சடங்குக்கான நிதி உதவி ரூ.2500/- வழங்கப்படும். இந்த உதவித்தொகை வழங்குவதற்கு இறப்புச்சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை. அடையாள அட்டையில் விவரங்களை குறிப்பிட்டு பதிவு செய்து கொண்டு இந்த உதவித்தொகை வழங்கப்படலாம்.

(ஏ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிவாரணம் மற்றும் உதவித்தொகை குறித்த செலவிற்காக வருவாய்த்துறை மானியக்கோரிக்கையில் 2011–12 ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு–செலவுத்திட்ட மதிப்பீட்டில் ரூ.85.62 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் 2006, நீக்கம் செய்யப்பட்டு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தவிருப்பதை தொடர்ந்து, தற்போதுள்ள நிதியொதுக்கத்தை பயன்படுத்திட ஏதுவாக கீழே பத்தி (ஐ)–இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணக்குத் தலைப்புகளின் பெயர் மாற்றம் செய்யப்படுகிறது.

(ஐ) <u>மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிதியுதவி குறித்த செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.</u>

a) <u>இயற்கை மரணத்திற்கான நிவாரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கான உதவி குறித்த செலவினம் :</u>

<u>பொது பிரிவு</u>

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் – 200 ஏனைய திட்டப் பணிகள் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KH முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – இயற்கை மரணத்திற்கான நிவாரணம் மற்றும் ஈமச்சடங்குகளுக்கு நிதியுதவி – 09 – உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (து.தொ.கு 2235 60 200 KH 0932)

<u>ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம்</u>

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் – 789 ஆதிதிராவிடருக்கான சிறப்பு கூறுகள் திட்டம் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JL முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – இயற்கை மரணத்திற்கான நிவாரணம் மற்றும் ஈமச்சடங்குகளுக்கு நிதியுதவி – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (து.தொ.கு 2235 60 789 JL 0939)

<u>பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம்</u>

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் – 796 பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JE முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – இயற்கை மரணத்திற்கான நிவாரணம் மற்றும்

ஈமச்சடங்குகளுக்கு நிதியுதவி – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (கு.தொ.கு 2235 60 796 JE 0938)

b) <u>விபத்தினால் ஏற்படும் மரணம்/காயங்களுக்கான நிவாரணம் மற்றும் ஈமச்சடங்கு செலவிற்கான நிதியுதவி:-</u>

<u>பொது பிரிவு</u>

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் – 200 ஏனையப் திட்டப் பணிகள் – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KN முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – விபத்தினால் ஏற்படும் மரணம்/காயங்களுக்கான நிவாரணம் மற்றும் ஈமச்சடங்கு செலவுகளுக்கான நிதியுதவி – 09 – உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (கு.தொ.கு 2235 60 200 KN 0930)

<u>ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம்</u>

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் – 789 ஆதிதிராவிடருக்கான சிறப்பு கூறுகள் திட்டம் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JP_முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் – விபத்தினால் ஏற்படும் மரணம்/காயங்களுக்கான நிவாரணம் மற்றும் ஈமச்சடங்கு செலவுகளுக்கான நிதியுதவி – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (கு.தொ.கு 2235 60 789 JP 0931)

<u>பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம்</u>

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் –60 ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத்திட்டங்கள் – 796 பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் – JI முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டம் – விபத்தினால் ஏற்படும் மரணம்/காயங்களுக்கான நிவாரணம் மற்றும் ஈமச்சடங்கு செலவுகளுக்கான நிதியுதவி – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (கு.தொ.கு 2235 60 796 JI 0930)

9. <u>அடையாள வில்லைகள் (tokens)</u>

இத்திட்டத்தின் கீழ் பதிவுத் தகுதி பெறும் பயனாளிகளுக்கு புதிய அடையாள அட்டைகள் வழங்கும் வரை உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அடையாள வில்லைகளை (TOKENS) வழங்கப்படும். அடையாள வில்லைகளை அச்சிட்டு வழங்கும் பணியை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொள்வர். இதற்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் தனியே நிலச்சீர்திருத்த ஆணையரகத்தை அணுகி பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

10. 2006–ஆம் ஆண்டு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நலவாரியமும் சட்டம் ரத்தானதால் கலைக்கப்பட்டதாகிவிடும். நீக்கச் சட்டத்தின்படி தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல நிதியத்தில் வரவு வைக்கப்பட்ட தொகையானது, அரசினால் குறித்துரைக்கப்படகூடிய அத்தகைய பிற நிதியம் அல்லது கணக்குத் தலைப்புக்கு மாற்றம் செய்யப்படுதல் வேண்டும். அதன்படி தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் கணக்கில் உள்ள நிதியானது நிலச்சீர்த்திருத்த இயக்குநரின் ஒரு பொது வைப்பு கணக்கில் (P.D. Account) பராமரிக்கப்படவும் அந்த கணக்கில் உள்ள தொகையை படிவங்கள், பதிவேடுகள், ஆரம்ப கட்ட அடையாள அட்டைகள் (அடையாள வில்லைகள்) முதலியன அச்சடிக்கவும், வாகன எரிபொருள் செலவிற்காகவும் பயன்படுத்திக்கொள்ள நிலச்சீர்திருத்த இயக்குநர் அனுமதிக்கப்படுகிறார்.

11. மேலே ஆணையிடப்பட்டுள்ளவாறு உதவித்தொகை வழங்கும் செலவிற்கு கூடுதல் நிதி தேவைப்படின் 2011–12ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதி ஒதுக்கத்தில் நிதி ஒதுக்கம் செய்திட ஏதுவாக உரிய கருத்துருவை நிதி (வருவாய்) துறைக்கு சமர்ப்பிக்குமாறு நிலச்சீர்திருத்த ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

12. மேற்கூறப்பட்ட பல்வேறு உதவிகள் அடங்கிய முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தை 10.09.2011 முதல் செயல்படுத்த அரசு ஆணையிடுகிறது.

13. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண் 137/ADS(PGR)/2011, நாள் 10–09–2011 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா. ராஜகோபால்,
*அரசு முதன்மைச் செயலாளர்.*

<u>பெறுநர்</u>
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
நிலச்சீர்திருத்த ஆணையர், சேப்பாக்கம், சென்னை– 600 005.
நிலச்சீர்திருத்த இயக்குநர், சேப்பாக்கம், சென்னை- 600 005.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து வட்டாட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
மாநில கணக்காயர், சென்னை – 600 018 (பெயரில்)
மாநில கணக்காயர், சென்னை – 600 035 (பெயரில்).
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள், சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள் (வடக்கு), (தெற்கு), (கிழக்கு), சென்னை.
<u>நகல்</u>
முதலமைச்சரின் செயலர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அனைத்து அரசுச் செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை-600 009.
பொதுத் (சிறப்பு.அ) துறை, சென்னை–600 009.

நிதி (அனைத்து தொடர்புடைய பிரிவுகள் மற்றும் வ.செ.பொது. I (ம) II)த்துறை, சென்னை– 600 009.
தொழிலாளர் நலத்துறை ஆணையர், சென்னை – 600 006.
வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர், சென்னை – 600 005.
விவசாயத்துறை ஆணையர், சென்னை – 600 005.
விவசாய சந்தைக்குழு ஆணையர், சென்னை – 600 032.
சர்க்கரைத்துறை ஆணையர், சென்னை – 600 035.
தொழிலாளர் அமைச்சகம், இந்திய அரசு, புதுடெல்லி.
இயக்குநர், சட்டக் கல்வித்துறை, சென்னை – 600 005.
இயக்குநர், மருத்துவக்கல்வித்துறை, சென்னை – 600 010.
இயக்குநர், கல்லூரிக்கல்வித்துறை, சென்னை – 600 006.
இயக்குநர், பள்ளிக்கல்வித் துறை, சென்னை – 600 006.
இயக்குநர், தொழில்நுட்பத்துறை, சென்னை – 600 025.
வருவாய்த்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,சென்னை – 600 009.
இருப்பு கோப்பு / உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.